அகதிகளின் இரயில் நிறுத்தப் போர்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா	சென்னை: ஆனி 25உ வெள்ளி (9—7—54)	மலர்: 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர்: ஆனி 26உ சனி (10—7—54)	இதழ்: 22

நெல்லை மாவட்ட தி. மு. கழகக் கிளை உறுப்பினர்களுக்கு

★ ★ ★

தி. மு. கழக நெல்லை மாவட்டக் கிளையின் முன்னாள் செயலாளர் தோழர் ச. வீரபாகு அவர்கள் செயலாளராக இருந்தபோது அவருக்கும், மாவட்டக் கிளையின் துணைச் செயலாளர்—பொருளாளர் ஆகியோர்க்கும் பிணக்கு ஏற்பட, இருசாராரும் மாவட்டக் கிளை பற்றிய அறிக்கைகளை மாற்றி மாற்றி விட்டுக்கொண்டிருந்தனர். இதனால் மாவட்டக் கிளையின் கட்டுப்பாடு குலையும் என்று கருதிய பொதுச்செயலாளர் அவர்கள், சட்டதிட்ட புத்தகத்தில் கண்டுள்ள "கழகத்தின் கொள்கைகளையும், நோக்கங்களையும் வளர்க்கும் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்" என்ற 62-ம் பிரிவின்படியும், "கழகத்தையும் நாட்டையும் பொறுத்த எந்தப் பிரச்சினைப் பற்றியும் முடிவுகள் சொல்வதற்கும், அறிக்கைகள் விடுவதற்கும் அதிகாரம் உண்டு" என்ற 63-ம் பிரிவின்படியும், நெல்லை மாவட்டக் கிளையின் கூட்டத்தைக் கூட்டி, சமரச நிலை உண்டாக்கும்படி என்னிடம் கட்டளை பிறப்பித்தார்கள்.

அதன்பேரில் நான் "திராவிட முன்னேற்றக் கழகத்தின் நெல்லை மாவட்டக் கிளை உறுப்பினர்களைக் கலந்து பேசி, ஆக்க வேலைகளுக்கான சில பல முடிவுகளை எடுக்க வேண்டியிருப்பதால், நெல்லை மாவட்டக் கழகத்தின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், ஏனைய உறுப்பினர்கள் ஆகியோர் இதனையே அழைப்பாகக் கொண்டு, 13—6—54 ஞாயிறன்று காலை முக்கூடலில் கூட வேண்டுகிறேன். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருக" என்று நான், 9—6—54-ம் நாள் "நம் நாட்"டில் அறிக்கை வெளியிட்டேன். தோழர் ச. வீரபாகு அவர்களுக்கும் கடிதம் மூலம் செய்தியை அறிவித்தேன். 13-6-54-ம் நாள் காலை நெல்லை ஜங்ஷனில் தோழர் வீரபாகு அவர்களைச் சந்தித்தபோது, முக்கூடல் கூட்டத்திற்கு வரும்படி அழைத்தேன். அவரும் "நீங்கள் போங்கள்; நான் பின்னால் வருகிறேன்" என்றுதான் வாய்மொழி பகர்ந்தார்.

முக்கூடலில் மாவட்டக் கிளையின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் கூடியிருந்தனர். தோழர் வீரபாகுவின் வருகைக்காகக் கூட்டம் காலை 11-30 மணி வரையில் எதிர்பார்த்திருந்தது. அவர் வராதுபோகவே, பிறகு என் தலைமையில் கூட்டம் துவங்கிற்று. கூட்டத்தைத் தலைமைக் கழகம் கூட்ட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை முதலில் நான் விளக்கிக் கூறினேன். துணைச் செயலாளரும், பொருளாளரும் முறைதவறி அறிக்கை வெளியிட்டதற்காக வருத்தம் தெரிவிக்கும்படி நான் கூறினேன்; அவர்களும் அவ்வாறே வருத்தம் தெரிவித்தனர்.

மாவட்டக் கிளை நல்ல முறையில் வளர்வதற்கான கருத்துக்களை உறுப்பினர்களில் பலர் தெரிவித்தனர். கண்பகலில் தோழர் வீரபாகு அவர்களிடமிருந்து விளக்கக் கடிதம் ஒன்று வந்தது; அதனைக் கூட்டத்திடம் அப்படியே படித்துக் காட்டினேன். தோழர் ச. வீரபாகு மாவட்டச் செயலாளராக இருந்து பணியாற்றுவதை ஒரு உறுப்பினர் கூட விரும்பவில்லை. மாவட்டக் கிளைச் செயலாளரை மாற்றி அமைக்கும் முடிவை அப்பொழுதே செய்ய வேண்டும் என்று எல்லோரும் வற்புறுத்தினார்கள். மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் உறுப்பினர்கள் வந்திருந்தபடியாலும், அவர்கள் செய்யும் முடிவு சட்ட வரம்புக்கு இசைய அமைகிறபடியாலும் செயலாளரை மாற்றி அமைக்கும் முடிவு எடுக்கப்பட்டது. தோழர் வீரபாகு அவர்கள், பொதுச் செயலாளர் கட்டளையையும், அதனை ஒட்டி நான் வெளியிட்ட அறிக்கையையும், தோழர் வீரபாகுவுக்கு நான் அனுப்பிய கடிதத்தையும், நான் நேரில் அழைத்த அழைப்பையும் மதிக்காமல் கூட்டத்திற்கு வராமல் இருந்த காரணத்திற்காகவும், தூத்துக்குடி சதி வழக்கு நிதியைத் தாம் வாக்களித்தபடி சேர்த்துக் கொடுக்கும் திறமையற்றிருந்த காரணத்திற்காகவும், 'சதி வழக்கு நிதிக்காக ரூ. 1000 சேர்த்துத் தந்தால் நெல்லைப் பொதுக்கூட்டத்திற்கு வருகிறேன்,' என்று பொதுச் செயலாளர் சொல்லிய வாக்கை ஏற்றுக்கொண்டு அதன்படி நடந்து காட்ட முடியாத திறனற்றிருந்த காரணத்துக்காகவும், சேர்ந்த நிதி ரூ. 237—4—0-ல் ரூ. 111—8—3-ஐச் செலவு செய்துவிடும் அளவுக்குத் திறமைக் குறைவாக இருந்த காரணத்துக்காகவும், அவருடைய போக்கு, கிளைக் கழகங்களோடு கொண்டிருந்த தொடர்பு கிளைக் கழகங்களுக்கு வெறுப்பு தரும் வகையில் அமைந்திருந்த காரணத்துக்காகவும் அவரைச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கி வைப்பது என்றும், துணைச் செயலாளரான தோழர் சு. கந்தசாமி அவர்களைச் செயலாளராக ஆக்குவது என்றும் கூட்டத்தினரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. ஒரு உறுப்பினர் கூட எதிர் கருத்துத் தெரிவிக்கவில்லை.

எனவே மாவட்டக் கிளை உறுப்பினர்களும், நெல்லை மாவட்டத்திலுள்ள எல்லா தி. மு. கழகத் தோழர்களும் திட்டவட்டமாக உணரவேண்டியது, நெல்லை மாவட்டக் கிளையின் செயலாளர் இப்பொழுது தோழர் சு. கந்தசாமி அவர்கள்தான். தோழர் ச. வீரபாகு அவர்களுக்கும், நெல்லை மாவட்டக் கிளைக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. அவர் விடும் அறிக்கைகளையும், செய்யும் நடவடிக்கைகளையும் மாவட்டக் கிளை உறுப்பினர்களோ, ஏனைய கழகத் தோழர்களோ பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை. கழகத்தின் கட்டுப்பாட்டைக் காப்பாற்றுகிற வகையில், தோழர் ச. வீரபாகு அவர்களுக்கு கழக சம்பந்தமான எவ்வித ஆதரவும் தர வேண்டாம் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

முக்கூடலில் அமைக்கப்பட்ட மாவட்ட மாநாட்டின் வரவேற்புக் குழுவிற்கு நல்ல ஆதரவு தந்து, விரைவில் மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதற்கான முறையில் பணியாற்றும்படி நெல்லை மாவட்டத்திலுள்ள கழகத் தோழர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

"அறிவகம்,"
சென்னை: 9—7—54.

இரா. நெடுஞ்செழியன்,
துணைச் செயலாளர், திராவிட முன்னேற்றக் கழகம்.

தண்டவாளத்தில் படுத்து இரயில்களை நிறுத்தினர்!

கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி கூட்டத்தைக் கலைக்க முயற்சி

தடியடி தர்பாரும் நடைபெற்றது

ரயில்களை நிறுத்தினர்! அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்க, காலை 6.30 முதல் மாலை 4 மணி வரை எல்லா ரயில்களும் நிறுத்தப்பட்டன!

தண்டவாளங்களில் தலையை வைத்தும் படுத்துக் கொண்டனர்!

இருநூறு பேர்கள் ரயில் பாதையில் உட்கார்ந்து கொண்டு, ரயில்களைப் போகவிடாது தடுத்திருக்கின்றனர்.

போலீசாரும், அதிகாரிகளும் அவர்களை விலகிப் போகுமாறு வேண்டினர்.

அவர்களோ மறுத்தனர் — உறுதி மொழி ஒன்று வேண்டினர்.

போலீசார் பொறுமை இழந்து கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்திருக்கின்றனர். இருபத்தொரு கண்ணீர்ப் புகை குண்டுகள் வீசப்பட்டன.

ரயில் நிறுத்தம் செய்தவர்களும் பதிலுக்கு கற்களால் போலீசாரைத் தாக்கினர்.

போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர். இதனால் ஒரு போலீசாருக்கும் மற்ற மூவருக்கும் காயங்கள் ஏற்பட்டன.

இருபத்தொரு பேர் கைது செய்யப்பட்டனர்.

அதிகாலையில் பான்காவோனிலிருந்து வந்த ஒரு ரெயிலைத் தவிர, கல்கத்தாவிற்கு வந்து சேரவேண்டிய எல்லா ரயில்களும் கல்கத்தா செல்ல முடியாது தாமதப்படுத்தப்பட்டன.

கல்கத்தாவிலிருந்து 36 மைல் தொலைவில் உள்ள கோப்ராடாங்கா என்னும் ரயில் நிலையத்திற்கருகிலேயே அவர்கள் ரயில்களை நிறுத்தினர்.

கல்கத்தாவிலிருந்து பான்காவோவிற்குச் செல்ல வேண்டிய எந்த ஒரு ரயிலும் செல்ல முடியவில்லை. அவைகள் பான்காவோவிற்குச் செல்லாமலேயே ஹாப்ரா என்னும் ஊர் வரை சென்று மீண்டும் கல்கத்தாவிற்கே திரும்பவேண்டியதாயிற்று.

இந்தச் சம்பவம் சென்ற புதனன்று கல்கத்தா அருகே நடைபெற்றிருக்கிறது.

மேற்கு வங்க முதலமைச்சர் சர் பி. சி. ராய் அல்லது மத்திய அகதிகள் மந்திரி [illegible] வரில் யாரேனும் நேரில் வந்து, தங்கள் குறைகளைக் கவனிப்பதாக உறுதிமொழி அளித்தாலன்றி கலைய மாட்டோம் எனக் கூறிவிட்டனராம்.

அதன் பிறகே, போலீசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் தடியடியும் கொடுத்து கூட்டத்தைக் கலைத்திருக்கின்றனர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தான் ரயில் போக்குவரத்து ஒழுங்குபட்டது. புதன்கிழமை காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை போராட்டம் தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது.

மேற்கு பாகிஸ்தான் அகதிகள் புனரமைப்புக் காலனியைச் சேர்ந்த இருநூறு அகதிகள்தான், தங்களின் புனர் நிர்மாணம் பற்றிய குறைபாடுகளை அரசாங்கத்திற்கு உணர்த்துவதற்காக, இந்த ரயில் நிறுத்தப் போரில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ரயில் தண்டவாளத்தில் வழி மறித்துக் கூடியிருந்த அவர்களை விலகிச் செல்லுமாறு போலீசார் வேண்டிக் கொண்டபோது [illegible]

"நடவடிக்கைகள் எடுப்போம்"

முதலமைச்சர் உறுதி?

எர்ணாகுளம், ஜூலை 8—

"சர்க்கார் சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்,"

என்று, தடையை மீறும் திரு—கொச்சி தமிழ்நாடு காங்கிரசின் போக்கு பற்றி கேட்டபோது, திரு—கொச்சி முதல் அமைச்சர் பட்டம் தாணுப்பிள்ளை கூறினார்.

திரு-கொச்சியில் வரிகொடா இயக்கம்

— (:) —

சர்க்கார் பஸ்களில் டிக்கெட்டின்றி பிரயாணம்

திரு-கொ. தமிழ்நாடு காங். எதிர்ப்பு வலுக்கிறது

திருவனந்தபுரம், ஜூலை 8—

திரு-கொச்சி தமிழ்நாடு காங்கிரசின் சத்தியாக்கிரக நடவடிக்கை குழுவினர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பனக்குடி என்னும் கிராமத்தில் கூடினர்.

தாங்கள் நடத்தும் சத்தியாக்கிரகத்தை வலுப்படுத்த புது முறைகள் பற்றி அவர்கள் ஆலோசனை செய்தனர்.

இதன்படி, திரு-கொச்சியில் வரி கொடா இயக்கம் ஆரம்பிக்கப்படுமாம்.

திரு—கொச்சி சர்க்கார் பஸ்களில் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்வார்கள் என்று தெரிகிறது.

திரு—கொச்சி தமிழ் நாடு காங்கிரசின் சட்டசபை உறுப்பினரான குஞ்சன் நாடார், தேவிகுளம் சென்றிருக்கிறார்.

இடைக்காலத்தில் கம்யூனிஸ்டு கட்சியினர் தேவிகுளத்தில் உள்ள நிலைமைகளை அறிய பி. டி. புன்னூஸ் எம். பி., எம். என். கோவிந்தன் நாயர், குமாரசாமி ஆகியோரை அனுப்பியிருக்கிறது.

சென்னையிலிருந்து ம. பொ. சிவஞானம் தேவிகுளம் செல்வார் என்று தெரிகிறது.

நம் நாடு

சென்னை 9—7—54 வெள்ளி

குரங்காய் முடிந்தது!

'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது' என்பது பழமொழி இப்பழமொழி திரு—கொச்சியில் ஆட்சி பீடமேறியுள்ள, மக்கள் சோஷலிஸ்டு கட்சி அமைச்சரவையின் அடக்குமுறை போக்கால், புத்துயிர் பெற்று விளங்குகிறது.

திரு—கொச்சியில் இருக்கும் தமிழர், பெரும்பான்மையினராக உள்ள தமிழ்ப் பகுதியை, சென்னை மாநிலத்தோடு இணைத்துவிட வேண்டுமென்பது, அங்குள்ள தமிழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். அங்குள்ள தமிழ் மரபினரின், இந்த நியாயமானகோரிக்கை, திரு—கொச்சி ஆட்சியில் இன்று ஆதிக்கம் பெற்றுள்ள, மலையாள மொழியினரை பெருந்தொகையாகக் கொண்டுள்ள மக்கள் சோஷலிஸ்டு கட்சியினருக்குப் பிடித்தமானதாக இல்லை. இதுபோலவே, எற்கனவே ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருந்த, காங்கிரஸ் குழுவினருக்கும் கசப்பாக இருந்திருக்கிறது.

திரு—கொச்சி தமிழர்களின் கோரிக்கையை மேறகுறித்த இருசாராரும் ஒப்புக்கொள்ள முடியாமைக்கு, பலவிதமான காரணங்களை அவர்களால்காட்டக்கூடும். அக்காரணங்களில் நியாயம் இருந்தாலும் இருக்கலாம். ஆனால், அந்த நியாயங்கள் எதுவும், திரு—கொச்சி தமிழர்களின் கோரிக்கையை நியாயமற்றது என மெய்ப்பிக்கத் துளியும் உதவாது.

திரு-கொச்சி தமிழ் நாடு காங்கிரஸை, தமிழ் நாடு காங்கிரசுடன் இணைக்க வேண்டுமென, திரு-கொச்சி தமிழ் நாடு காங்கிரஸ் கோரியது. இந்தச் சாதாரண கோரிக்கையை ஒப்புக்கொள்ளவும் அகில இந்திய காங்கிரசுக்கு மனம் வரவில்லை

அகில இந்திய காங்கிரசின் பிடிவாதம் வெட்டவெளிச்சமானதும், திரு-கொச்சி காங்கிரஸ் சர்க்காருக்குக் கொடுத்துவந்த ஆதரவை திரு—கொ த. நா. காங்கிரஸ் திரும்பப்பெற்றுக்கொண்டது. காங்கிரஸ் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த காங்கிரஸ் தமிழரையும், தம் அமைச்சர் பதவியைத் துறக்கச் செய்தது.

திரு—கொ. த. நா. காங்கிரஸின் ஒத்துழைப்பை இழந்த காங்கிரஸ் ஆட்சி, சட்டசபையில் போதிய எண்ணிக்கை பலமில்லாததால் எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து வெற்றி பெற முடியாமல் தோல்வி கண்டது. இதன் விளைவாக புதிய தேர்தலும் நடைபெற வேண்டிய நிலை பிறந்தது.

மறுதேர்தலில் கலந்து கொண்ட எந்த ஒரு தனிக் கட்சிக்கும், ஆட்சிப் பொறுப்பை எற்றுக் கொள்ளும் அளவிற்கு எண்ணிக்கை பலம் ஏற்படவில்லை. காங்கிரஸ் கட்சியையும் ஒரு சிறுபான்மை கட்சியின் நிலைக்கே, தேர்தல் முடிவு கொண்டுவந்து விட்டது.

கம்யூனிஸ்டு கட்சியுடன், தேர்தலுக்கு முன்பாக உருவாக்கப்பட்ட கூட்டணியில் ஒரு அங்கமாக இருந்த மக்கள் சோஷலிஸ்டு கட்சி, தேர்தலுக்குப் பிறகு, அம் முன்னணியை விட்டு வெளியேறி சிறு தொகையினரைக் கொண்ட ஒரு கட்சியாக இருந்துங்கூட, ஆட்சிப் பொறுப்பை ஒப்புக்கொண்டது. மக்கள் சோஷலிஸ்டு கட்சி அமைச்சரவையுடன், சட்டசபை காங்கிரஸ் கட்சி ஒத்துழைக்கும் என்ற வாக்குறுதியின் மீதே, இன்று அங்கு மக்கள் சோஷலிஸ்டு கட்சி ஆட்சி நடைபெற்று வருகிறது. என்று காங்கிரஸ் கட்சியின் ஆதரவு துண்டிக்கப்படுகிறதோ, அன்றே மக்கள் சோஷலிஸ்டு கட்சி ஆட்சியும் குப்புறக் கவிழ்ந்து போவது நிச்சயம்.

மற்ற மாநிலங்களில் ஆட்சி பீடமேறியுள்ள காங்கிரஸ் கட்சி, மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு, கொடிய அடக்குமுறைகளைக் கொண்டு எவ்விதம் பதில் சொல்லி வருகிறதோ, அதேபோன்றுதான், திரு-கொச்சி ஆட்சி பொறுப்பிலே உள்ளமக்கள்சோஷலிஸ்டு கட்சியும் அடக்குமுறைகளைக் கொண்டு மக்களின் கோரிக்கைகளைத் திருப்பியடித்து வருகிறது. இத்துறையில், காங்கிரஸ் ஆட்சியையும் வெட்கித் தலை குனியச் செய்யும் வகையில், திரு-கொச்சி சர்க்கார் நடந்து கொள்ளுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம், திரு—கொ.-வில் உள்ள தேவிகுளத்தில் போடப்பட்டுள்ள 144 தடை யுத்தரவையும், அதை மீறத் துணிந்தவர்களை சிறையில் தள்ளிய பூட்டுவதையும்!

தேவிகுளத்தில் ஒரே தொழிற் சங்கத்தின்கீழ் ஒன்று திரண்டிருந்த நம்பர் தோட்டத் தொழிலாளர்கள், இன்று இரு கூறுகள் பிளவுபடுத்தப்பட்டுள்ளனர். வெவ்வேறு பெயர் கொண்ட இரு சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டு, ஒற்றுமையாக இருந்த தொழிலாளர்கள், தங்களுக்குள்ளாகச் சண்டையிட்டுக் கொள்வதில் முனைந்துள்ளனர்.

தொழிலாளர்களிடை ஏற்பட்டுள்ள மனக் கசப்புக்கும், சண்டை சச்சரவிற்கும், எவர் பொறுப்பாளிகளோ, நாமறியோம்! இப் பிளவு பணிக்கும் மக்கள் சோஷலிஸ்டு கட்சி சர்க்காருக்கும் தொடர்பு இருக்கிறதா இல்லையா என்று ஆராயும் பணி, விஷயத்திற்குப் புறம்பானதுமாகும்.

தேவிகுளத்தில் உள்ள தொழிலாளர்கள் பெரும்பாலும் தமிழர்கள். சென்ற மறு தேர்தலில், திரு—கொ. த. நா. காங்கிரஸ் கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்ட அபேட்சகர்களை ஆதரித்து, காங்கிரஸ் அபேட்சகர்களை மண்ணைக் கவ்வச் செய்துள்ளனர். காங்கிரஸ் கட்சி அபேட்சகர்களைத் தோற்கடித்த 'மாபாதகம்' ஒன்றே போதுமானது, காங்கிரஸ் கட்சியின் பின்னணி பலத்துடன், ஆட்சி பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் மக்கள் சோஷலிஸ்டு கட்சி சர்க்காரின், சீற்றத்தைக் கிண்டிக் கிளறுவதற்கு!

தேவிகுளத்தில் உள்ள தோட்டத் தொழிலாளர்களான தமிழர்கள், திரு—கொச்சி தமிழ் வழங்கும் பகுதி, சென்னையுடன் இணைய வேண்டும் என்பதில் அசைக்க முடியாத விருப்பமுடையவர்களாவர். வேறு வகைகளில் கருத்து வேற்றுமை கொண்டவர்களாக அவர்கள் இருந்த போதிலும், தமிழ் பகுதி, சென்னை மாநிலத்துடன் சேருவதில் ஒன்றுபட்ட மனமுடையவர்களேயாவர். அவர்கள் மீது, வேறு காரணங்களைப் புகலாகக் கூறி அடக்குமுறைகளை வீசி அச்சுறுத்தினால், திரு—கொச்சி தமிழ்ப் பகுதி சென்னையுடன் இணைய வேண்டுமென்ற தங்களுடைய அடிப்படை நோக்கத்தை மாற்றிக் கொள்ள முந்துவர் அல்லது வெளியில் கூற அஞ்சுவர் என்றா நினைக்கிறது, போலும் திரு—கொச்சி சர்க்கார்!

தேவிகுளத்தில் பிளவுபட்டுக் கிடக்கும் தமிழர்களை ஒன்றுபடுத்தும் நோக்கத்தோடு, திரு-கொ. த. நா. காங்கிரஸ் முக்கியஸ்தர்களான ஏ. நேசமணி, எம். பி., ஏ. சிதம்பரநாடார் எம். எல். ஏ., அப்துல் ரசாக், (மக்கள் மேல் சபை உறுப்பினர்) ஆகிய மூவரும் அங்கு செல்ல முனைந்தனர். அங்கு செல்லுந்தருவாயில், அவர்கள் கைது செய்யப்பட்டு, தடையுத்தரவை மீறியதாக விசாரிக்கப்பட்டு, ஆறு வார சிறை தண்டனையும் தரப்பட்டு சிறையிலும் தள்ளப்பட்டுள்ளனர்.

அதேபோன்று மற்றொரு எம் எல் ஏ.-வான தங்கபாண்டியனும் மூணாறு பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்கூறிய தலைவர்களைக் கைது செய்து, சிறையில் தள்ளிவிட்டால், கிளர்ச்சி நின்றுவிடும், தமிழர்கள் தங்கள் கோரிக்கையை வெளியிலே சொல்லவும் அஞ்சுவர் என திரு—கொ. மக்கள் சோஷலிஸ்டு கட்சி அரசாங்கம் மனப்பால் குடித்தது ஆனால், நிலைமை நெருக்கடியாகி விட்டது.

கூட்டத்தில் பேசச் சென்ற குறிப்பிட்ட சில முக்கியஸ்தர்களைத் தடுத்துவிடுவது என்ற நிலை மாறி, திரு—கொ. தமிழ் பகுதி சென்னையுடன் சேர்க்கப்படுவதற்கு, தொடர்ந்து அறப்போர் தொடுப்பது என்ற நிலை பிறந்திருக்கிறது

வெற்றி பெற்ற பின்னர், அல்லது அதற்கான சாதகமான வாக்குறுதி கிடைத்த பின்னர்தான் அறப்போர் நிற்கும் என்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது!

திரு—கொச்சி ஆட்சியாளர் கோணத்திலிருந்து, இவ்வறப்போர் நோக்கப்படுமானால், பிள்ளையார் பிடிக்கக் குரங்காக முடிந்த கதையை நினைவுறுத்துவதாக இருப்பதைக் காணலாம்!

திரு—கொச்சி தமிழர் நிலையில் இருந்து பார்க்கும் பொழுது, இவ்வறப்போர், தீமையிலும் நன்மை புதைந்திருக்கிறது என்ற மகத்தான உண்மையை வலியுறுத்திக் கூறுவதாக இருக்கக் காணலாம்!

திரு-கொச்சி தமிழர் அறப்போர் விரைவில வெற்றி பெறுமாறு விழைகிறோம், கொண்ட லட்சியத்திற்காக, அடக்குமுறைக்கு பலியாகி, சிறைபட்டுள்ள தோழர்களையும் நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

உலகத்திலேயே நீளமான பாசனக் கால்வாய்!

வட நாட்டவருக்குக் கிடைத்த 'சுதந்திரத்'தின் பலன்!

தென்னாட்டவர் தெரிந்து கொள்ள சில புள்ளி விவரங்கள்

பாக்ரா—நங்கல் பாசனக் கால்வாய் வடநாட்டை எப்படி எல்லாம் செழிப்புறச் செய்கிறது என்பதைப் யாரும் ஏன்!

நீளத்தில் மட்டும், சிறிய சிறிய உபகிளைக் கால்வாய்களின் நீளம் எல்லாம் சேர்த்து 11,90 மைல் ஆகும்.

இந்தக் கால்வாயினால் நீர்ப்பாசன வசதி பெறும் நிலங்களில் ஆண்டுதோறும் ரூ 132 கோடி மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியாகும். பருத்தி மட்டும் இப்போதுள்ளதைக் காட்டிலும் அதிகமாக 8 லட்சம் பேல்கள் விளையுமாம்.

"சர்க்காருக்கு இதன் மூலம் ஆண்டுதோறும் 3 கோடி 2 லட்சம் ரூபாய் உபரியாக வருமானம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

"இன்று பாலைவனமாகக் காட்சி தரும் பஞ்சாப், பெப்சு, ராஜஸ்தான் ஆகிய பிரதேசங்கள் வெகு சீக்கிரத்தில பொன்விளையும் பூமியாக மாறப்போகின்றன,"—என்று கூறிப் பூரிக்கிறார் பஞ்சாப் முதலமைச்சர் பீம்சென் சச்சார்!

"இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதினால் சாதாரண உற்பத்திப் பெருக்கம் மட்டுமல்ல—நம் பகுதி மக்களின் சமூக, கலாச்சார, தேசிய வாழ்க்கைத்தரமும் உயரும்"—எனக் கூறி பெருமைப்பட்டுக் கொள்கிறார் அவர்.

உலகத்திலேயே மிகப் பெரிய தெனக் கருதப்படும் பாக்ரா—நங்கல் பாசனக் கால்வாய் இந்தியப் பிரதமர் பண்டித நேருவால் திறந்து வைக்கப்பட்டது

பாக்ரா — நங்கல் திட்டம் எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதைப் புரிந்துகொள்ள கீழ்காண்ட புள்ளி விவரங்கள் உதவலாம்.

சிமெண்ட் காங்கிரீட் வேலை மொத்தம் 50 கோடி கன அடி 40 கோடி கன அடி ஜல்லி தேவைப்படும்.

360 கோடி கன அடி மண்ணை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும்.

சுமார் 15 லட்சம் டன் சிமெண்டும் 1,17,000 டன் ஸ்டீலும், ஸ்டீலுக் கம்பிகளும், 10,42,000 கன அடி வெட்டு மரமும், 2,63,000 டன் நிலக்கரியும், 75 லட்சம் காலன் பெட்ரோலும், 18 லட்சம் காலன் மசகு எண்ணெயும், 54 லட்சம் காலன் அதிவேக டீசல் எண்ணெயும், 58 லட்சம் காலன் உலை எண்ணெயும், 15 லட்சம் பவுண்டு கிரீசும் இந்த வேலைகளுக்குத் தேவைப்படுமென கணக்கிடப்பட்டிருக்கிறது.

இது தவிர, ஏராளமான இயந்திரக் கருவிகளும், கணக்கற்ற இயந்திர சாதனங்களும், பிரத்தியேகமான கருவிகளும் தேவைப்படும்.

இந்த பாக்ரா-நங்கல் திட்டத்தை நிறைவேற்றி வைக்க மொத்தம் 156 கோடி ரூபாய் செலவாகுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

இப்போது நங்கல் திட்டம் மட்டும் முடிவடைந்து விட்டது. இதைத்தான் பண்டிதர் திறந்து வைத்திருக்கிறார். பாக்ரா திட்ட வேலைகள் இந்த ஆண்டு இறுதியில் துவங்கும்.

நங்கல் கால்வாயின் நீளம் மட்டும் 40 மைல்—நங்கல் அணையால் நிர்மாணிக்கப்பட்டுள்ள நீர்த் தேக்கத்திலிருந்து ஆரம்பமாகிறது.

இந்தக் கால்வாய் வழியாக அதிவேகமாய்ப் பாய்ந்து செல்லும் தண்ணீர் வழியில் இரண்டு இடங்களில் மின்சார உற்பத்திக்கு பயன்படுத்திக் கொள்ளப்படும்.

நங்கல் நீர்த் தேக்கத்திலிருந்து பிரியும் இடத்தில் இந்தக் கால்வாய் சுமார் 140 அடி அகலமும், 20.6 அடி ஆழமும் இருக்கிறது. வழியில குறுக்கிடும் போது 58 வேறு கால்வாய்களையும் இது கடந்து செல்கிறது.

இதில் அமைக்கப்பட்டுள்ள மின்சார நிலையங்கள் இரண்டிலும் 96,600 கிலோவாட் மின்சாரம் கிடைக்குமாம்.

இந்த நங்கல் ஹைடெல் கால்வாயின் தொடர்ச்சியான பாக்ரா பிரதான கால்வாய் 108 மைல் நீளம் இருக்கிறது.

இந்த நங்கல் ஹைடெல் கால்வாய், பாக்ரா பிரதான கால்வாய் இரண்டும் சேர்ந்து உலகத்திலேயே அதிக நீளமான ஒரே கால்வாய்த் தொடராக விளங்குகின்றன.

'ரிக் வேத'த்தில் பக்தூனிஸ்தான்!

புதுடில்லி, ஜூலை 8—'ரிக் வேத'த்தில் பக்தூனிஸ்தான் பற்றிய குறிப்புகள் இருப்பதாக புது டில்லியில் உள்ள ஆப்கன் தூதுவராலயம் கூறுகிறது.

அந்த தூதுவராலய அறிக்கை ஒன்றில் கண்டிருப்பதாவது:—

"பக்தூனிஸ்தானின் பெயர் "பக்திகா" என ரிக் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. "பக்தாத்" அல்லது "பக்தான்" என்ற பிரதேசத்தில் "பக்தி" "பக்தியெஸ்" "பக்தவீஸ்" ஆகிய மக்கள் வாழ்வதாக கி. மு. 525 முதல் 428 வரை வாழ்ந்த ஹொரடட்டஸ் எனும் கிரேக்க சரித்திராசிரியர் குறிப்பிடுகிறார். "பக்தா" மன்னனின் பெயர் "தோர்வையானவ" என்றும் 99 கோட்டைகளை வென்ற "திவோதாஸன்" என்பவனை அவன் வென்றதாகவும், ரிக் வேதம் கூறுகிறது. பக்தூன்கள் மிகவும் வீரம் நிறைந்தவர்கள் என்று ஹொரடட்டஸ் கூறுகிறார்.

நகர நலத் திட்டங்களை நிறைவேற்ற சர்க்கார் பணம் தர இயலாதாம்!

நகரசபைகள் கடன் எழுப்பக் கட்ஜூ புத்திமதி

குண்டூர், ஜூலை 6—

"நகர சபைகள், தங்கள் நகரங்களில் நிர்மாணிக்கும் தண்ணீர் சப்ளை திட்டங்களுக்கோ, சாக்கடை கால் அமைக்கும் திட்டங்கள் போன்றவைகட்கோ மாநில மத்திய அரசாங்கங்களைப் பண உதவி செய்யுமாறு கேட்பதற்கு மாருக, தாங்களே, தங்கள் பகுதியில் மக்களிடம் கடன் எழுப்பி அத்திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்; இம்மாதிரிச் செய்வது, மக்கள், தங்களுக்கே உதவிக் கொள்வதற்கு தங்களால் ஆனதை எல்லாம் செய்து கொள்கிறார்கள் என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்,"

என்று மத்திய அரசாங்க உள்நாட்டு மந்திரி டாக்டர் கட்ஜூ குண்டூர் நகரசபை தனக்களித்த வரவேற்பின்போது கூறினார்.

அவர் மேலும், தான் இந்த 'அரிய' யோசனையை உள்நாட்டு மந்திரி என்ற முறையில் அல்லாது தனிப்பட்ட முறையில் சொல்வதாகவும் குறிப்பிட்டார்.

வீடில்லாதவர்கட்கு வீடு கட்டித் தருவது அவசியம் என்பதை வலியுறுத்தி ஒரு உறுப்பினர் தந்த மனு ஒன்றிற்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:—

'வீடில்லாதோர் பிரச்னை, நாடு முழுவதும் பரவிக் கிடக்கும் ஒரு பெரிய பிரச்னையாகும். தொழிலாளர்களுக்கெல்லாம் நகரின் நடுவே உயர்ந்த வீடுகளைத் தேடிக் கொண்டிருப்பதைக் காட்டிலும், நகருக்கு அடுத்தாற் போன்று காலனிகள் அமைத்து அந்த தொழிலாளர்களைக் குடியேறச் செய்து, அங்கிருந்து அவர்கள் வேலை செய்யும் இடங்களுக்குப் போக வர, போக்குவரத்து வசதியும் செய்து தருவதற்கான திட்டங்களை மேற்கொள்வதே சிறந்தது," என்றார்.

"நகர சபை போன்றவைகளுக்கு, சர்க்கார் பண உதவி செய்வது என்பது சாத்தியமல்ல; அரசாங்கங்களே பெரும் அளவில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது அவர்களிடமிருந்து அதிகமான உதவி எதிர்பார்ப்பது அர்த்தமற்றதாகும்; எனவே, நகர சபைகள் தங்கள் பகுதி மக்களிடம் கடன் எழுப்பி திட்டங்களை நிறைவேற்ற முன்வரவேண்டும்,"

"கடன் கொடுக்கும் குடிமக்கள் தாங்கள் கொடுத்த பணத்திற்கு வட்டி பெறுவது மட்டுமின்றி அதிகமான பலனையும் பெறுவார்கள் என்பதினால் அவர்கள் கடன் கொடுக்க முன்வரலாம்," என்று அவர் மேலும் கூறினார்.

சென்னை சட்ட சபை

ஆகஸ்ட் 6-ந் தேதி கூடுகிறது

சென்னை சட்ட சபையின் அடுத்த கூட்டம் ஆகஸ்டு மாதம் 6-ந் தேதி பகல் 11 மணிக்கு துவங்கும் எனத் தெரிகிறது.

இதற்கு அடுத்த வாரத்தில் மேல் சபை கூடும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில், அறநிலையப் பாதுகாப்பு சட்டத் திருத்த மசோதா தேர்வுக் குழுவின் அறிக்கை பரிசீலனைக்கு வரும்.

தோட்டப் பயிர்கள் மீது விவசாய வருமான வரி விதிக்கும் மசோதாவும் சட்ட சபையில் பிரரேரிக்கப்படும். இம் மசோதா கூட ஒரு தேர்வுக் குழுவின் ஆலோசனைக்கு விடப்படலாம். மசோதாவும் சில தினங்களில் வெளியிடப்படும்.

அபிவிருத்தி வரி விதிப்பு மசோதா, கோர்ட் கட்டண சீரமைப்பு மசோதா, ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அந்தக் கூட்டத்தில் வராது எனத் தெரிகிறது.

சபை ஒருவார காலம் நடைபெறும் எனத் தெரிகிறது

நிலமற்றோருக்கு 5 ஏக்கர் நிலம்

சேலம் மாவட்டத்தில் 50,000 ஏக்கர் விநியோகம்!

காமராசரின் மற்றொரு நல்ல முயற்சி!

சென்னை, ஜூலை 7—

45,000 ஏக்கர் சுலபமாகப் பயிர் செய்யக்கூடிய நிலங்களை, சென்னை சர்க்கார், சேலம், ஆத்தூர் வட்டத்தில் உள்ள நிலமில்லாத விவசாயிகளுக்கு தலைக்கு 5 ஏக்கர் வீதம் பகிர்ந்து கொடுக்க முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. இந்தப் பெரு முயற்சி நிலமில்லாத விவசாயிகளின் மனக் குறையை பெரும் அளவில் போக்கக்கூடும்.

இந்த நில விநியோகம் 1955-ம் ஆண்டு ஜனவரி மாத முடிவிற்குள் நடைபெற்று விடும் எனத் தெரிகிறது. இந்த வேலைகளைத் துரிதமாகக் கவனிக்க தனி அதிகாரிகளும் பணியாளர்களும் நியமிக்கப்படுகிறார்கள்.

இந்தத் திட்டத்தின்படி நிலம் பெறும் விவசாயிகளுக்கு நிலத்தைப் பண்படுத்தி பயிர் செய்வதற்காக, கடனாக பண உதவியும், இன்ன பிற உதவிகளும் செய்து தரவும் அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

இன்னும் மீதி உள்ள சுமார் 48,000 ஏக்கர் நிலங்களும், பின்னர், ஒரு நீண்ட காலத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குத் தரவும் அரசாங்கம் எண்ணியுள்ளதாகத் தெரிகிறது.

ஆந்திராவில் வேர்கடலைப் பயிராகும் நிலத்தின் பரப்பளவு சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில் இரண்டு மடங்காகியிருக்கிறதாம்.

மாவட்ட ரெவினியூ நிர்வாகம்!

ஊழல்களைப் போக்கி திறமையை வளர்க்க...

விசாரணைக் குழு நியமனம்

சென்னை, ஜூலை 9—

மாவட்டங்களில் 'ரெவினியூ' நிர்வாகம் திறமையாக இயங்கச் செய்ய, விசாரணை செய்து சர்க்காருக்கு சிபாரிசு செய்ய கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட விசாரணைக் குழு ஒன்றை சர்க்கார் நியமித்திருக்கின்றனர்:—

திரு. எம். வி. சுப்ரமணியம் ஐ. சி. எஸ். (தலைவர்)

மதுரை மாவட்ட அதிகாரி திரு வி. ஏ. ராமகிருஷ்ணன் ஐ. சி. எஸ். (உறுப்பினர்)

விவசாய இலாக்கா துணைக் காரியதரிசி திரு. வி. ராமச்சந்திரன் ஐ. ஏ. எஸ். (குழுவின் செயலாளர்)

இந்த விசாரணைக் குழு தன் வேலையை ஜூலை 21-ந் தேதி துவங்கி மூன்று மாத காலம் விசாரணை நடத்தி சர்க்காருக்கு சிபாரிசுகளை அறிவிக்கும்.

ரெவினியூ நிர்வாக முறையில் ஏற்படும் அனாவசியமான காலதாமதத்தையும் தவறுகளையும் நீக்கவும், 'தாசில்தார்'களுக்கும் மாவட்ட அதிகாரிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்புகளை உண்டுபண்ணவும், ஒவ்வொரு 'ரெவினியூ' அதிகாரியும், நல்ல அபிவிருத்தி அதிகாரியாகவும் இருக்கவும், நீதி நிர்வாகப் பிரிவினையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் தரவும், அண்மையில் நடைபெற்ற மாவட்ட அதிகாரிகளின் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலை கவனித்து சிபார்சு கூறவும் ஆக பல்வேறு வேலை முறைகள் இந்தக் குழுவிடம் தரப்பட்டுள்ளனவாம்.

சென்னை மாநிலத்தில் 1,250 ஒற்றை ஆசிரியர் பள்ளிகள்

மாவட்டக் கழகங்கள் மூலம் துவக்கத் திட்டம்

சென்னை, ஜூலை 7—

மாவட்டக் கழகங்கள், தங்கள் மாவட்டங்களில், 500 முதல் 1,000 வரை குடி மக்களைக் கொண்ட கிராமங்களில் ஒற்றை ஆசிரியரைக் கொண்ட பள்ளிகளைத் தொடர்ந்து துவக்கலாம் என சென்னை அரசு எல்லா மாவட்டங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி உள்ளது. மாவட்டக் கழகங்கள், 1000-க்கு அதிகமான குடிமக்கள் கொண்ட கிராமங்களில் பள்ளிகள் துவக்குவதில் சிரமம் இருப்பின், மேற்கண்டபடி, மாவட்ட கல்வி அதிகாரியின் ஆலோசனையுடன் பள்ளிகளைத் துவக்கலாம்.

திட்டக் கமிஷனின் கல்வித் திட்டப்படி, சென்னை மாநிலத்தில் 1,250 ஒற்றை ஆசிரியர் பள்ளிகளை, மாவட்டக் கழகங்கள் மூலமாகத் துவக்க, எண்ணியுள்ளனராம். இதனால் படித்தவரிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு ஒழியக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

500 வழக்கறிஞர்கள் ஆந்திரா சென்றனர்

கோடை விடுமுறைக்குப் பின்னர் திறக்கப்பட்ட சென்னை உயர்நீதி மன்றத்தில் கூட்டம் மிகவும் குறைவாகக் காணப்பட்டது. 500-க்கு மேற்பட்ட ஆந்திர வழக்கறிஞர்கள் சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து ஆந்திர உயர்நீதிமன்றத்திற்குச் சென்று விட்டனர் என்று தெரிகிறது.

24 பேர் கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து விலகினர்

மன்னார்குடி, ஜூலை 7—

மன்னார்குடி மாவட்டத்தைச் சார்ந்த, 24 அரிசன கம்யூனிஸ்டு தலைவர்கள், கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து விலகிவிட்டனர். அவர்கள் 24 பேரும் மன்னார்குடி உடையார் மான்யம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் 30—6—54 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்த நகர சபைத் தலைவர் திரு. எம். கோபால்சாமி தென்கொண்டாரிடம், ஒவ்வொருவராக, தங்கள் விலகல் கடிதத்தைக் கொடுத்ததாகத் தெரிகிறது.

மத்திய பாரத்திற்கு ரூ. 65 கோடி!

முதல் 5 ஆண்டுத் திட்டச் செலவு

நாகபுரி, ஜூலை 7—

மத்திய பிரதேசத்தில் ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பிட்ட காலத்தில் முடிவடையும் என்று கூறப்பட்டிருக்கிறது. அது போலவே திட்டத்திற்கான செலவுத் தொகையும் சரியாகச் செலவு செய்யப்பட்டு வரும் என்று தெரிகிறது.

மத்திய பாரத்தில் முதல் ஐந்தாண்டு திட்டத்தின் மதிப்பீடு ரூ 43 கோடியாகும். இப்போது அதன் மதிப்பீடு 65 கோடி ரூபாய்களாகும்.

இதில் மாகாண சர்க்காரின் திட்டங்கள், மத்திய சர்க்காரின் திட்டங்கள், தேசிய விஸ்தரிப்பு வேலைகள், தேசிய மலேரியா ஒழிப்பு வேலை இவைகளடங்கும்.

6 கோடி ரூபாய் செலவில் மின்சாரத் திட்டங்கள் சில ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு விட்டன.

நீதி வழங்குவதில் ஜூரி முறை இருக்க வேண்டியது அவசியம் என்று மத்திய சர்க்கார் அமைச்சர் கட்ஜூ விஜயவாடாவில் பேசுகையில் கூறினார்.

திரு. ராமநாத நயினார் மாரடைப்பினால் மரணம்

'இரணியன்' நடிக தோழர்களை கைது செய்தவர்

ஆரணி, ஜூலை 2—

ஓய்வு பெற்ற ஆரணி வட்டார போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. ராமநாத நயினார் 30—6—54 அன்று திடீரென மாரடைப்பினால் தனது 61 வது வயதில் காலமானார். 25 வருட காலம் வெகு நேர்மையாகவும் திறமையாகவும் போலீஸ் இலாக்காவில் பணியாற்றிய இவர் கடந்த 5 மாதங்களுக்கு முன்தான் ஓய்வு பெற்றார். இவர் பதவியிலிருந்த காலத்தில்தான் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்ற அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட நாடகம் திருவத்திபுரம் தோழர்களால் நடத்திக் காட்டப்பட்டது. நாடகத்தில் பங்கு பெற்ற தோழர்களை திரு. நயினார் தான் கைது செய்தார் என்பது நினைவிருக்கலாம்.

இவருக்கு இரண்டு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண் மகவும் மனைவியும் உள்ளனர்.

ஒரு மகன் மதுரைக்கு சப்-இன்ஸ்பெக்டராகவும் ஒரு மகன் ஆரணியில் வழக்கறிஞராகவும் இருக்கிறார்கள்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மும்முனைப் போர் முழக்க நாள்

ஜூலை 15-ல் நாடெங்கும் கொண்டாடுக!

★

1953 ஜூலைத் திங்கள் 15-ம் நாள்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த சிறப்பிற்குரிய நன்னாள்!

'ஆச்சாரியார் குலத் தொழில் கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம்', 'கல்லக்குடிப் பெயர் மாற்றப் போராட்டம்', 'நேருவின் ஆணவ மொழி எதிர்ப்பு இரயில் நிறுத்தப் போராட்டம்' ஆகிய மூன்று போராட்டங்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கித் திறம்பட நடத்திக் காட்டி வெற்றி வாகை சூடியது 1953 ஜூலைத் திங்களிலாகும்.

1953 ஜூலை 14-ம் நாள் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் அமைந்த போராட்டப் படையினர் ஆச்சாரியார் குலத் தொழில் கல்வித் திட்டத்தை எதிர்த்துப் போராட்டத்தைத் துவக்கினர்.

1953 ஜூலை 15-ம் நாள் தோழர் மு. கருணாநிதி அவர்கள் தலைமை தாங்கிய போராட்டப் படையினர் 'டால்மியாபுரம்' என்ற இரயில் நிலையத்தின் பெயரைக் 'கல்லக்குடி' என்று மாற்றும் போராட்டத்தைத் துவக்கினர்.

1953 ஜூலை 15-ம் நாளில் தமிழகமெங்கணும் உள்ள கிளைக் கழகத் தோழர்கள் இரயில் நிறுத்தம் செய்து திராவிடத்தில் வளர்ந்து வரும் சக்தியின் ஆற்றலையும், அளவையும் ஆணவ மொழி பேசிய பண்டித நேருவுக்கு உணர்த்தினார்கள்.

கழகம் நடத்திய மும்முனைப் போராட்டங்களில் பெற்ற வெற்றியினை நினைத்து மகிழவும், பெறவேண்டிய வெற்றியினை நினைத்து ஊக்கம் பெறவும், கிளைக் கழகத் தோழர்கள் ஊர்தோறும் இவ்வாண்டு ஜூலை 15-ம் நாளை மும்முனைப் போர் முழக்க நாளாகக் கொண்டாடும்படி பொதுச்செயலாளர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

கழகக் கட்டிடங்களிலும், பொது இடங்களிலும் புதுக் கொடி ஏற்றுவித்தல், ஊர்வலங்கள் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் கூட்டுதல், போராட்டங்களின் வரலாற்றை விளக்கித் துண்டு அறிக்கைகள் வெளியிடுதல், கூட்டங்களில் போராட்டங்களின் அடிப்படைக் கருத்துக்களையும், கழகத் தோழர்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களையும் விளக்கிக் கூறி, போராட்டத்தில் கலந்துகொண்ட வீரர்களுக்கு நன்றி தெரிவித்தல் ஆகிய முறைகளில் ஜூலை 15-ம் நாளைக் கொண்டாடும்படி கிளைக் கழகத்தார் எல்லோரும் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

அரசியலாரின் அனுமதி பெற்று நடத்த வேண்டிய பொதுக்கூட்ட ஊர்வலங்களை அனுமதி பெற்று நடத்தவும், அமைதி—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகியவை குலையாமல் காத்துக்கொள்ளவும் ஆன முறைகளில் ஜூலை 15-ஐக் கொண்டாடுவீர்களாக!

தலைமை நிலையம்
சென்னை-13
6—7—54

இரா. நெடுஞ்செழியன்,
துணைச் செயலாளர்.
திராவிட முன்னேற்றக் கழகம்,

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

நடையனேரி

தி. மு. கழக முதலாவது ஆண்டு விழா

11—7—54 ஞாயிறு மாலை

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு
எஸ். முத்து
உசிலைத்தம்பி

அன்று இரவு மதுரை எம். முகமது குழுவினரால் இன்னிசை விருந்து நடைபெறும்.

★

திருமங்கலம்

பந்தடித் திடலில்

11—7—54 ஞாயிறு மாலை

தலைவர்: மு. கா. சிக்கந்தர்

பேசுவோர்:

எம். எம். மேத்தா
எம். ஏ. இரசாக்

★

கிழப்பாவூர்

11—7—54 ஞாயிறு மாலை

தலைவர்: ரா. சுப்பிரமணியன்

பேசுவோர்:

ஏ. பி. தர்மலிங்கம்
ம. பொன்னம்பலம்
ஏ. என். ஜி. ராசன்
அ. தம்புசாமி

24-வது வட்ட தி. மு. க. செ. கு. உறுப்பினர்கட்கு

11—7—54 பகல் 1-30 மணிக்கு கழக அலுவலகத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதசமயம் கழக வரவு-செலவு கணக்குகள் பரிசீலனை செய்தல், மற்றும் பல முக்கிய நிகழ்ச்சிகள் குறித்து ஆலோசிக்கப்படும்.

44-வது வட்ட தி. மு. க. செ. கு. உறுப்பினர்கட்கு

25—7—54-ல் சென்னை, மயிலையில், நடக்க இருக்கும் பொதுக் கூட்டத்தின் ஆக்க வேலைகளை முடிவு செய்ய வேண்டியிருப்பதால், 11—7—54 காலை 9 மணிக்கு மைலாப்பூர், 'எம். கே. அம்மன் கோவில் தெரு, செட்டியார் தோட்டத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

பெங்களூர் தி.மு.க.செயற் குழு உறுப்பினர்கட்கு

11—7—54 காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கழக ஆண்டு விழா கொண்டாடுவதற்கான திட்டம் வகுக்கப்படும்.

நாகை தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்களுக்கு

11—7—54 ஞாயிறு இரவு 9 மணிக்கு கழக கட்டிடத்தில் நாகை தி. மு. கழக செயற்குழு கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெறும். செயற் குழுவில் ஜூலை 15 நினைவு நாள் விழா பற்றியும், நாகையில் இவ்வையிலையில் தி. மு. கழகம் நடக்க கொள்ளும் முறை பற்றியும், ஆய்வுக்குழு அமைத்துக்கொள்ளப் படும்.

பெங்களூர்—பிளாக்பள்ளி தி.மு.க. உறுப்பினர்கட்கு

11—7—54 காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் செயற் குழு கூடும். அதுபோது, கழக வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்படும்.

சொற் பயிற்சி வகுப்பு

11—7—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு நாகை தி. மு. கழகக் கட்டிடத்தில், அழகிரி சொற் பயிற்சி மன்றத்தின் சார்பில், 'மறுமலர்ச்சி' எனும் தலைப்பில் சொற்பயிற்சி வகுப்பு நடைபெறும்.

அவதாரமாயிருந்த ராமன் 'மகாபுருஷ'னாக மாறியது எப்போது?

— (:) —

நமது எதிர்ப்பு ஆச்சாரியார் போக்கை மாற்றிவிட்டிருக்கிறது!

சென்னையில் தோழர் நெடுஞ்செழியன்

"கம்ப ராமாயணம்?" என்ற தலைப்பில் சென்னை மெமோரியல் மண்டபத்தில் தோழமைக் கழகத்தின் சார்பில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அரியதோர் இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்தினார். கூட்டத்திற்கு தோழியர் கௌதமி எம். ஏ., தலைமை தாங்கினார். நுழைவுக் கட்டணமாக அணா நான்கு செலுத்தி ஆயிரத்திற்கு அதிகமான மக்கள் திரண்டிருந்தனர்.

"கம்பராமாயணம்" எரிக்கப்படவேண்டிய ஒன்று என்று நாம் கூறிவந்திருப்பதை எதிர்ப்பது போன்றே அன்றி அதைப் பற்றிப் பேசியாவது சடசடவென சரிந்துவரும், மக்களிடையே அவர்கள் பெற்றிருந்த 'செல்வாக்கை,' சரியாமல் காத்துக்கொள்ளலாம் என்ற 'நல்ல நம்பிக்கையினாலோ' கம்பராமாயணக் காலட்சேபம் செய்ய புதிதாகக் கிளம்பியிருக்கும் 'அரசியல் பாகவதர்களுக்கு' நல்லதொரு சாட்டையடியாக அமைந்தது தோழர் நெடுஞ்செழியன் பேச்சு!

இசை முரசு நாகூர் அனிபா கூட்டத் துவக்கத்திலும் இறுதியிலும் கழகப் பண் இசைத்தார்.

அவர் ஆற்றிய 2-மணி நேர சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்படுகிறது:—

"கம்ப ராமாயணம் நறுமணம் பரப்பும் பூஞ்சோலை போலவும், அங்கே நல்ல பல மலர்கள் இருப்பதுடன் நாட்டு நலிவுகளைப் போக்க மருந்தும் கிடைப்பது போலவும் இன்று பலர் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படிப் பேசுவோரின் தொகை சற்று அதிகமாகவே நாளுக்கு நாள் வளர்ந்துவருவதையும் நாம் காண்கிறோம்.

நாம் நுழையாத 'பூஞ்சோலை' அல்ல கம்ப ராமாயணம்; 10 அல்லது 15 ஆண்டுகட்கு முன் அதனுள் நுழைந்து, ஆங்குள்ள மலர்களை கொய்து, மணத்தை நுகர்ந்தும், மணம் நறுமணமா அல்லவா என்பதையும் கண்டு, அந்த மலர்கள் மலவற்றின் தேனையும் வடித்து, 'கம்பரசமாகத் தந்தவர்கள்தான் நாம்!

இன்று நாம் மீண்டும் அந்தச் 'சோலை'யினுள் நுழைய வேண்டிய அவசியத்தை உண்டாக்கி இருக்கிறார்கள் நண்பர்கள்!

கம்பராமாயணம் பற்றி நாட்டிலே நாள்தோறும் கணக்கற்ற இடங்களிலே 'கதா காலட்சேபம்' பாகவதர்கள் பலரால் நடத்தப்படுகிறது. இப்போது முன்னாள் முதலமைச்சர் கனம் 'சக்ரவர்த்தி' ஆச்சாரியார் 'கல்கி' இதழில், 'சக்ரவர்த்தி திருமகன்' என்ற தலைப்பில் 'ராமாயண ஆராய்ச்சி' செய்து, கட்டுரைகள் எழுதி வருகிறார்.

போதாதென்று அருமை நண்பர் ஜீவானந்தம் அவர்களும், 'கம்பன் கண்ட தமிழகம்' குறித்து காரைக்குடி கம்பர் விழாவில் பேசி இருக்கிறார்.

எனவே நான் போலும்—தோழமைக் கழகத் தோழர்கள் என்னை 'கம்பராமாயணம்?' பற்றி பேசப் பணித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

இன்று, 'கல்கி'யில் ஆச்சாரியார் எழுதுகிறார்—காலம் பரம்பரையாக ராம காதை, வால்மீகியால் கேட்கப்பட்டு, எழுதப்பட்டது; அதனுள் இன்று பல சிக்கல்கள் வந்துள்ளன; வால்மீகி ராமனை ஒரு அவதார புருஷனாகச் சித்தரிக்கவில்லை; ஒரு 'மகா புருஷ'னாகத்தான் சித்தரித்துள்ளார்; கம்பரின் வைணவ பக்தி, ராம பக்தி, ராமனை ஒரு அவதாரமாகவே தன் கவிதையில் சிருஷ்டிக்கத் தூண்டிற்று; ஆகவே ராமன் ஒரு மகாபுருஷன்தான். அவதாரம் அல்ல — என்று பொருள்படும்படி வெளிப்படையாக எழுதியுள்ளார்.

ராமாவதாரம் பத்து அவதாரங்களில் ஒன்றெனப் பெருமையோடு பேசிக் கொண்டிருந்த அந்த ஆரிய சமுதாயத்தின் தலைவர் ஆச்சாரியார், இன்று ராமன் அவதாரமல்ல—மகா புருஷன்தான் என்றெழுதுகிறார் என்றால், எதனால்? எதற்கும் பிறகு இந்த இறக்கம் அவர்கள் கருத்தில் ஏற்பட்டது?

நாம் அடுத்த அடி எடுத்துக் காட்டிய ஆதாரங்கள், செய்த முழக்கங்கள் இவைகளின் பலன்தானே அது?

நமது அறிவு பூர்வமான விவாதங்களின் முன்னும் ராமன் ஒரு அவதார புருஷன் என்னும் கேலிக்கூத்து நிலைக்க முடியாது போனதின் விளைவுதானே இன்று ஆச்

சேலம் மாவட்ட தாழ்த்தப்பட்டோர் மாநாடு

11—7—54 காலை 9 மணிக்கு கிருஷ்ணகிரி, எஸ். ஆர். சினிமா கொட்டகையில் மேற்படி மாநாடு தோழர் ஏ. இரத்தினம், எம். எல். ஏ., தலைமையில் நடைபெறும்.

அன்று மாலை 6-30 மணிக்கு கிருஷ்ணகிரி காந்தி மைதானத்தில் தோழர் வீ. வீராசாமி, எம். பி., தலைமையில் 'தாழ்த்தப்பட்டோரும் தற்கால அரசியலும்' என்பது பற்றி பலர் பேசுவர்.

திருமணங்கள்

11—7—54 ஞாயிறு அன்று வளவனூரில் தோழர் வி. பி. முனுசாமி—தோழியர் சரோசா வாழ்க்கை ஒப்பந்தம் திருக்குறள் வீ. முனுசாமி, எம். பி. அவர்களின் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

*　　*　　*

11—7—54 ஞாயிறு காலை 9-30 மணியளவில் மதுரை, நெ. 59, முனிச்சாலை ரோடு, மணமகன் இல்லத்தில் தோழர் அ. சா. தனிக்கோடி அவர்கள் தலைமையில் தோழர் கிருட்டிணனுக்கும்—தோழியர் பூரணத்தம்மாளுக்கும் திருமணம் நடைபெறும். தோழர்கள் என். முத்து, எம். அய்யாக்கசாமி ஆகியோர் பேசுவர்.

உலக அரங்கில்

லண்டன்:

சீனப் பிரதமர், தன்னுடைய ஜினீவா, டில்லி, இரங்கூன் பேச்சு வார்த்தைகள் பற்றி சீன மக்கள் அரசியல் இயக்க ஆலோசனைக் குழுவினரிடம் எடுத்துச் சொன்னாராம். மா-சேதுங்கும் அப்போது இருந்தார் என்று தெரிகிறது.

கிளீவ்லாந்து:

மெக்சிகோ நகர் செல்ல இருந்த விமானமொன்றில் கைவி துப்பாக்கி ஒன்றைக் காட்டி விமானியைப் பயமுறுத்திய 15-வயது சிறுவன் ஒருவனை விமானி சுட்டுக் கொன்றார் என்று தெரிகிறது.

முன்சன் (தென்கொரியா)

கம்யூனிஸ்டுகள், இராணுவ சூன்யப் பகுதியில் 25 தடவைகள் சுட்டனர் என்றும் பாருக்கும் சேதமில்லை என்றும் தெரிகிறது. ஐ. நா. போலீசார் விசாரணை செய்கின்றனர்.

ஹாங்காங்:

எதிரி தாய்லினாலும் விரும்பி முயற்சி செய்தால் இந்தோ—சீனாவில் அமைதி ஏற்படுமென்று டாக்டர் ஹோ-சி-மின் பேட்டி ஒன்றில் கூறினார்.

பிராங்க்பர்ட்:

ஜெர்மனியில் உள்ள அமெரிக்க இராணுவம் மிகவும் பலம்வாய்ந்தது என்றும், புதிதாக யாரையும் சேர்க்காமல் அடுத்த 12 மாதங்களைச் சமாளிக்கலாம் என்றும் அமெரிக்க இராணுவ காரியதரிசி கூறினார்.

கெய்ரோ:

சூயஸ் கால்வாய்பற்றி மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க பிரிட்டனிடமிருந்து தனக்கு சில பிரேரணைகள் கிடைத்திருப்பதாக கெய்ரோவில் உள்ள பிரிட்டிஷ் தூதர் ரால்ப் ஸ்டீவன்சன் கூறினார்.

மிச்சிகன்:

"சுதந்திர உலகின் எதிர்காலம் ஆசிய மக்களின் கையில் தான் இருக்கிறது," என்று அமெரிக்க உப ஜனாதிபதி நிக்சன் தன் கட்சிக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

"நடவடிக்கை எடுக்க இயலாது!"

"திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் இந்திய தேசியக் காங்கிரசின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாத அமைப்பென்றும், ஆகவே, சத்தியாக்கிரகம் செய்யும் அவர்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாது" என்றும், காங்கிரஸ் பொதுக் காரியதரிசி பல்வந்த்ராய் மேத்தா கர்நூலில் நிருபர்களிடையே கூறினார்.

சாரியார் 'ராமன் அவதாரமல்ல' 'மகா புருஷன்'தான் என்றெழுதுவது ?

நாம், பார்ப்பன நண்பர்கள் 'கம்ப ராமாயணக்' காலட்சேபம் செய்வது பற்றிக்கூட அதிகமாகக் கவலை கொள்ளவில்லை. அந்த ராமாயணக் கருத்துக்களில் மலிந்து கிடக்கும் மத போதையும், தெய்வ பக்தியும் இந்த நாட்டவரை வாழாது தடுக்கும் தீய சக்திகள்—அவை மக்களைத் தற்குறிகளாக்கி, சிந்தனை இழந்து, தாழ் நிலைக்கு இழுத்துச் செல்லும் என்று தமிழ் நாட்டிலே பத்து ஆண்டுகட்கு முன்னர் முழக்கமிட்டாரோ அதே நண்பர் ஜீவா, இன்று, ராமாயணக் காலட்சேபம் செய்ய முற்பட்டிருப்பதுதான் நம்மை அதிகமாக வருந்தச் செய்கிறது.

[பின்னும் வரும்]

பாரிஸ்:

பிரெஞ்சிந்திய பிரதேசங்கள் பற்றி மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று பிரான்ஸ் தனது கோரிக்கையை இந்தியத் தூதுவராலயத்தின் மூலமாக அனுப்பிவிட்டதாம்.

*　　*　　*

வடக்கு இந்தோ—சீனாவில் செக்கந்தி பிரதேச நகரான ஹைபென்னைச் சுற்றியும் வியட்மின் துருப்புகள் சூழ்ந்து கொண்டன என்று தெரிகிறது.

கொழும்பு:

"இலங்கை சர்க்காரை அவமதிப்பதோ அல்லது அதன் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதோ தனது நோக்கமல்ல," என்று இந்திய தூதுவர் தேசாய் கூறியிருக்கிறார். இவரது நிருபர் பேட்டி ஒன்று பற்றி இலங்கையில் ஏற்பட்ட எதிர்ப்புகளை பற்றி விளக்க, தேசாய், இலங்கைப் பிரதமர் கொத்தலாவலையைச் சந்தித்தார்.

*　　*　　*

இலங்கை அமைச்சர் ஆர். ஜி. சேனநாயக ராஜினாமா செய்துவிட்டார். இலங்கை கப்பல் கம்பெனி ஒன்று சர்க்காரே அமைக்க வேண்டுமென சேனநாயகா கூறியதற்கு மந்திரிசபையில் எதிர்ப்பு ஏற்பட்டதாம். இவரது ராஜினாமாவை கொத்தலாவலை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனது கூறியிருக்கிறார்.

இரங்கூன்:

பதவியிலிருந்து மாற்றப்பட்டிருப்பவரும் பர்மாவில் இந்தியத் தூதுவருமான சி. கே. செட்டூர் சீக்கிரமே இரங்கூனை விட்டுப் புறப்படுவார் என்று தெரிகிறது.

நைரோபி:

கென்யா சர்க்காரின் இனக் கொள்கை கென்யாவில் உள்ள ஐரோப்பியர்களின் முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ளதென்று கென்யா ஐரோப்பிய வாக்காளர்கள் கழகம் கூறியிருக்கிறது. இக்கழகம்தான் கென்யாவில் மிகப்பெரிய அரசியல் அமைப்பாகும்.

பட்டன்ரோக்:

பள்ளிகளில் மாணவர்களிடையே இன வேற்றுமை கூடாது என்ற அமெரிக்க உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை அமுல் நடத்த இயலாதென்று லூசியானா நாட்டின் சட்டசபை முடிவு செய்திருக்கிறது.

ஜினீவா:

உலக நாட்டு ஐக்கிய ஒப்பந்தம் அமைக்க வேண்டுமென்ற முயற்சியை பூதர்கள் எதிர்க்கின்றனர் என்று தெரிகிறது.

∴　　∴　　∴

தாய் நாடு சென்றிருந்த சோவியத் அமைச்சர் மாலடோவ் மீண்டும் ஜினீவா பேச்சுகளில் கலந்து கொள்ளும் பொருட்டு ஜினீவா வந்து சேர்ந்தார் என்று தெரிகிறது.

ஜார்ஜ்டவுன்:

சிறையில் தங்களை மற்ற கைதிகளிடமிருந்து பிரித்து தனியே வைத்திருப்பதை ஆட்சேபித்து பொது மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ஜெட்டி ஜெகனும் அவரது தோழர்களும் ஜார்ஜ்டவுன் சிறையில் உண்ணாநோன்பு ஆரம்பித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால், அறிஞர் அச்சகத்தில் அச்சிட்டு வெளிப்பட்டது (12, குறுக்கு நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: இ. என். அண்ணாதுரை, எம். ஏ.